**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.161/2019**

**PW10**

| | | |
|---|---|---|
| **Name** | : | மரு. ஸ்ரீவத்சா |
| **Father's Name** | : | சங்கர் |
| **Village** | : | |
| **Taluk/District** | : | திருவண்ணாமலை |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.01.2026.

A1 to 3 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராகவும், உதவி பேராசியராகவும் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.06.2017 அன்று அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது காலை 10.50 மணியளவில் பொரிக்கல் கிராமத்தை சேர்ந்த திரு. சத்தியராஜ் த.பெ. சுப்பிரமணி வயது 23 மதிக்கத்தக்க ஆண் நோயாளியை அவரது பாட்டி திரு. ராஜம்மாள் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் சுயநினைவுடனும், சுதாரிப்புடனும் இருந்தார். அவரை விசாரித்தபோது தனக்கு அடையாளம் தெரிந்த ஒரு ஆண் நபர் அன்று காலை 9.00 மணியளவில் அவரது வயலில் மரக்குச்சியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. 7x1x1 செ.மீ அளவிலான செந்நிற ரத்த கசிவுடன் இடது பக்க மண்டை ஓட்டில் ஒரு கிழிந்த காயம்.

மேற்கண்ட நபருக்கு முதலுதவி அளித்து விபத்து பதிவேடு எண். 2516574 பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று நான் விபத்து பதிவேடு நகலின் பின்பக்கத்தில் மருத்துவ ஆவணங்களை சரிபார்த்து கருத்து வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் மற்றும் காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.5.** அதே தினம் அவருடன் ராஜம்மாள் என்பவரும் சிகிச்சைக்கு ஆஜரானார். அவருக்கும் விபத்து பதிவேடு

சான்றிதழ் வழங்கினேன். விபத்து பதிவேடு சான்றிதழ் இல்லாத காரணத்தால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.